# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 01, 2023

Weekly E-paper ● April 01, 2023




## திருந்தவே மாட்டார்களா?

சுப. வீரபாண்டியன்

### 2024 சனாதனத்திற்கும், திராவிடத்திற்குமான தேர்தல்

பீட்டர் அல்போன்ஸ்

### சூடு கண்டும் பூனைக்குச் சுரணையில்லை!

தலையங்கம்

### தமிழ்நாடு தரும் மகளிருக்கான உரிமைத் தொகை

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 01, 2023 Weekly E-paper ● April 01, 2023


# திருந்தவே மாட்டார்களா?

**சுப. வீரபாண்டியன்**

இந்து மத விரோதிகள், இந்து மதத்தை மட்டுமே குறிவைத்துத் தாக்குகிறவர்கள் என்று நம் மீது ஒரு விமர்சனம் உண்டு. அதனை நாம் மறுக்கவில்லை. உண்மைதான், நாம் இந்து மத விரோதிகளே, இந்து மதத்தைக் கூடுதலாகக் குறி வைத்துத் தாக்குகின்றவர்களே! எனினும் அதற்கு என்ன காரணம் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பகுத்தறிவாளர்களாகிய நாம், எந்த மதத்தையும் ஏற்பதும் இல்லை, ஆதரிப்பதும் இல்லை, பின்பற்றுவதுமில்லை! ஆனாலும் இந்து மதத்தின் மீது நமக்கு இருக்கும் கூடுதலான கோபத்திற்கு ஒன்றே ஒன்றுதான் காரணம். இந்து மதம் என்பது சாதிகளின் தொகுப்பாக இருக்கிறது என்பதும், பிறப்பின் அடிப்படையில் உருவான சாதியை வைத்து மனிதர்கள் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுடன் நடத்தப்படுகிறார்கள் என்பதும்தான் நம்முடைய குறிப்பான சினத்திற்குக் காரணம்!



“அதெல்லாம் அந்தக் காலம், இப்ப யாரு சார் சாதி எல்லாம் பார்க்கிறார்கள்?” என்று கேட்கும் அறிவாளிகள் நம்மிடமும் உண்டு! இன்று இந்த நிமிடம் வரையில்; இந்தியாவில், இந்து மதத்தை ஏற்றவர்களிடையே சாதி பார்த்துத்தான் அனைத்தும் நடக்கின்றன என்பதும், சாதிதான் நம் வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் தீர்மானிக்கிறது என்பதும் அசைக்க முடியாத உண்மையாக இருக்கிறது!

தொடக்கத்தில் வருணமாக இருந்தவை, பிறகு சாதிகளாக, கிளைச்சாதிகளாக, உட்சாதிகளாகப் பெருகின என்பதே எதார்த்தம்!

சாதிகளுக்கு எல்லாம் மூலமாக இருந்த வருணப் பிரிவுகளை, இப்போதும் அவர்கள் உறுதியாக பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு, அண்மையில் தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.சி பள்ளித் தேர்வில் கொடுக்கப்பட்ட ஒரு வினாத்தாளே சாட்சியாக நிற்கிறது!

ஆறாம் வகுப்பு, சமூக அறிவியல் தேர்வின் வினாத்தாள் இது!

ஒன்றை இன்னொன்றுடன் பொருத்துக (*match the following* ) என்னும் பகுதியில் இவ்வினா இடம்பெற்றுள்ளது. ஒரு பக்கம் வைசியர், சூத்திரர்,

பிராமணர், சத்திரியர் என்றும், மறுபக்கம் குருமார்கள், அரசர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள் என்றும் கொடுக்கப் பட்டிருக்கிறது. யார் குருமார், யார் வணிகர் என்று மாணவர்கள் பொருத்திக் காட்ட வேண்டும். ஆங்கிலத்தில் (*labourers*) என்று கொடுக்கப் பட்டிருந்தாலும் அதன் பொருள் என்ன என்று நாம் அறிவோம். அடிமைகள், கூலிகள், ஏவல் வேலை செய்வோர் என்பதுதான் அதன் பொருள்.

ஆறாம் வகுப்புப் பிள்ளைகளின் மூளைகளில் இந்த நஞ்சு விதைக்கப்படுகிறது என்றால், இவர்கள் இன்னும் திருந்தவே இல்லை என்பது தானே உண்மை! இப்படி மனிதர்களை பிறப்பினால் பிரித்தாளும் ஓர் அமைப்பு அல்லது ஒரு மதம் எப்படி எல்லோருக்குமான மதமாக இருக்க முடியும்? இந்துக்களை ஒடுக்குகிறவர்கள், இந்துக்கள் எனப்படுவோரின் இன்னொரு பகுதியாக இருக்கிறார்கள் என்றால், இது எப்படி இந்து மதமாகும்? பார்ப்பன மதம் தானே இது! அதை எதிர்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கத்தானே செய்கிறது!

50 ஆண்டுகளாக ஆன்மீகப் பரப்புரைகளை, இந்து மதக் கருத்துகளைப் பரப்பி வரும் சுகி. சிவம் போன்றவர்களே,

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## சூடு கண்டும் பூனைக்குச் சுரணையில்லை!




அன்றே சினம் கொண்டு பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் இப்படி:

"தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை, இந்தத் தான்தோன்றி கட்கென்ன ஆணவமோ? எப்பக்கம் வந்து புகுந்துவிடும்?

இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்? "

இன்று அவ்வப்போது வெவ்வேறு வடிவங்களில் நுழையப் பார்க்கிறது, இந்தி. *FSSAI* எனப்படும் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், அரசின் பால் கூட்டுறவுச் சங்கமான ஆவின் நிறுவனத்திற்குப் புத்தி சொல்ல வந்துவிட்டது.

அதாவது ஆவின் நிறுவனத்தின் தயிர் பாக்கெட்டுகளில் இனி தமிழில் தயிர் என்று எழுதக்கூடாதாம். மாறாக 'தஹி' என்று இந்தியில்தான் இருக்க வேண்டுமாம். 'வேண்டுமானால்' அடைப்புக் குறியில், அதுவும் சிறிதாகத் தயிர் என்று தமிழில் போடலாமாம்.

இதற்குத் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் "எங்கள் தாய்மொழியைத் தள்ளிவைக்கச் சொல்லும் *FSSAI*, தாய்மொழி காக்கும் நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். மக்களின் உணர்வுகளை மதியுங்கள்! குழந்தையைக் கிள்ளிவிட்டுச் சீண்டிப் பார்க்கும் நயவஞ்சக எண்ணம் யாருக்கும் வேண்டாம், தொட்டிலை ஆட்டும் முன்னர் தொலைந்து விடுவீர்கள்" என்று இறுக்கமாகப் பதிலடி கொடுத்திருக்கிறார்.

பால்வளத் துறை அமைச்சர் நாசர், 'அப்படி எல்லாம் இந்தியில் போட முடியாது' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். தமிழை உச்சி முகர்ந்து, திருக்குறள் சொல்லி, காசியில் கூட்டம் போட்டு, புளகாங்கிதம் அடைந்த மோடி அரசின் இரட்டை வேடமும், முகமூடியும் தயிர் பாக்கெட்டில் வந்து நிற்கிறது.

அன்று 'உப்பில்' கைவைத்தார் காந்தி. நிலை குலைந்தது ஆங்கில அரசு.

இன்று தயிர் பாக்கெட்டில் கை வைக்கிறது மோடி அரசு ? அடுத்து வரும் ஆண்டு 2024 !

தமிழ்நாட்டைத் தொடர்ந்து கேரளம், கர்நாடகம், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்கள் இந்தி ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கி விட்டன.


இந்தியின் ஆதிக்கத்தை, மாநிலங்களின் மொழிகள் ஒடுக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை !

கடும் எதிர்ப்பு காரணமாக ஒன்றிய அரசின் *FSSAI* நிறுவனம், தன் உத்தரவைத் திரும்பப் பெற்றுள்ளது என்ற செய்தி இப்போது கிடைத்துள்ளது.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

1ஆம் பக்க தொடர்ச்சி ...



4. The head of the Panchayat is known as a ________
a. Zilla Parishad b. Mayor c. Councillor d. Sarpanch
5. The Hindu Succession Amendment Act was passed in the year ____
a. 2005 b. 2007 c. 2008 d. 2009
6. Match and pick the correct option:

| | Column A | | Column B |
|---|---|---|---|
| (i) | Brahmanas | (a) | Rulers and warriors |
| (ii) | Kshatriyas | (b) | Traders, merchants |
| (iii) | Vaishyas | (c) | Priestly class |
| (iv) | Shudras | (d) | Rituals |
| (v) | Yagnyas | (e) | Labourers |

அண்மையில் மனம் நொந்து பேசி இருப்பதை வலையொளியில் நாம் பார்த்தோம். அவரைப் பார்த்து கல்யாணராமன் என்னும் ஒரு பார்ப்பனர், "சூத்திர உபன்யாசகர்" என்று குறிப்பிட்டுள்ளதைச் சுகிசிவம் எடுத்துக்காட்டுகிறார். எத்தனை ஆண்டுகள் மதக்கருத்துகளைப் பரப்பினாலும், எவ்வளவுதான் மத இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தாலும், நீ பிராமணனா சூத்திரனா என்பதுதான் அடிப்படை என்றால், இது எப்படி எல்லோருக்குமான மதமாக இருக்க முடியும்?

"நம் நாட்டிற்கு விடுதலை வந்து இத்தனை ஆண்டுகள் ஆன பிறகும் சமத்துவம் வரவே இல்லையா?" என்று சுகி.சிவம் கேட்கிறார். ஆம், அண்ணல் அம்பேத்கர் அன்றே இந்த வினாவிற்கு விடை சொல்லி இருக்கிறார். "நமக்கு அரசியல் ஜனநாயகம் (political democracy) வந்திருக்கிறதே தவிர, சமூக ஜனநாயகம் (social democracy )இன்னும் வரவில்லை."

அதற்குத் தடையாக இருக்கிற இந்து மதத்தைக் குறி வைத்துத் தாக்குவதில் என்ன பிழை?

●

# 2024- சனாதனத்திற்கும், திராவிடத்திற்குமான தேர்தல்

## பீட்டர் அல்போன்ஸ் நேர்காணல்

**திரு. ராகுல் காந்தி அவர்களின் பதவி இழப்பிற்குப் பின்னர் காங்கிரஸ் கட்சி இதில் மேற்கொள்ளவிருக்கும் சட்டப்பூர்வமான நடவடிக்கை என்ன?**



பதில் : காங்கிரஸ் கட்சி இதை இரண்டு கோணத்தில் பார்க்கிறது. ஒன்று, அரசியல் கோணம். மற்றொன்று, சட்ட ரீதியாக. சட்டரீதியாக இதைப் பார்க்கும்போது, பதவி நீக்கம் செய்திருக்கிற மக்களவைச் செயலாளருக்கு அரசியல் அமைப்புச் சட்டம் அந்த அதிகாரத்தை வழங்கவில்லை. பதவி நீக்கத்தைக் குடியரசுத் தலைவர்தான் செய்ய முடியும். குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்து அனுப்ப வேண்டும். அதன் பிறகு அவர் இதன்மேல் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். ராகுல் காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்து விடக்கூடாது என்ற நோக்கம் மட்டுமே பா.ஜ.க.வினருக்கு. அதனால் அவசரப்பட்டு, சட்டவிரோதமாக இதனை அவர்கள் செய்திருக்கிறார்கள். நீதிமன்றங்கள் இந்த விஷயத்தில் காங்கிரசின் கருத்தை ஏற்றுக்கொள்ளும் என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால் இதைவிட அரசியல் ரீதியான கோணம் மிக முக்கியமான கோணம். எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கிற வாய்ப்பாக இதைக் காங்கிரஸ் கட்சி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**2024 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும்போது, ராகுல் காந்தி அவர்களின் பெருமையைக் குலைக்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பது அவர்களின் திட்டமா?**

ராகுல் காந்தியே "நான் கேட்கும் கேள்வியை அவர்கள் நிறுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள்" என்கிறார். அந்தக் கேள்வி மிகவும் முக்கியமானது. 20,000 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தில் சீனாக்காரர்கள் முதலீடு செய்திருக்கிறார்கள். அந்த நிறுவனம். யுத்தத் தளவாடங்களைத் தயாரிக்கிற, ராணுவ ரகசியங்களைத் தெரிந்து கொள்ளும் நிலையிலிருக்கிற நிறுவனம். அதனுடன் ஒப்புதலும், புரிந்துணர்வும் எப்படி போடப்பட்டது? என்ற கேள்விக்குப் பதிலைத் தேடினால் பா.ஜ.க.வின் தேசாபிமானம், ஊழலற்ற ஆட்சி என்ற அத்தனை பிம்பங்களும் அடிபட்டுப் போகும். அந்தக் கேள்வியைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்தப் பதவி நீக்கம்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் போக்கினை மேற்கொண்டு வருகிறது. இதற்கு அண்மைய எடுத்துக்காட்டு தெலுங்கானா. இந்தச் சூழ்நிலையில் வருகிற 2024 தேர்தலில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பது எந்த அளவுக்கு சாத்தியம்? மம்தா பானர்ஜி போன்றவர்களுக்குக் காங்கிரசுடன் இணைவதில் உள்ள தயக்கங்களைப் போக்கி அவர்களைப் போன்றவர்களையும் ஒன்றிணைப்பது சாத்தியமா?**

நிச்சயமாக. அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அளித்துள்ள ஆலோசனையைக் காங்கிரஸ் கட்சியும் பின்பற்ற வேண்டும். மற்ற மாநிலக் கட்சிகளும் பின்பற்ற வேண்டும். "மாநிலக் கட்சிகள் இதை ஒரு அகில இந்தியத் தேர்தலாகப் பார்க்க வேண்டுமே தவிர மாநில அதிகாரத்திற்கான தேர்தலாகப் பார்க்கக் கூடாது" என்று நமது முதலமைச்சர் அற்புதமாக இதைக் குறிப்பிட்டார். மாநிலக் கட்சிகளின் ஆதரவும், அனுசரணையும் இல்லை என்றால் மத்தியில் ஆட்சி மாற்றம் என்பது நடைபெறாத கனவு என்றும் கூறியுள்ளார். அதனால் காங்கிரஸ் கட்சி எங்கெல்லாம் விட்டுக் கொடுக்க முடியுமோ விட்டுக் கொடுத்து, ஒன்றுபட வேண்டிய இடத்தில் தத்துவார்த்த அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும். மம்தா பானர்ஜி, அரவிந்த் கேஜ்ரிவால், சந்திரசேகர ராவ் ஆகியோர் இந்த ஒற்றுமைப் படுத்தலில் சற்று நெருடலாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரு குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்று சேர்வார்கள் என்று நம்புகிறேன்.

**பிரதமர் மோடி பேசும் மேடையெங்கும் கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-operative Federalism) குறித்துப் பேசுகிறார். ஆனால் பா. ஜ. க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. இந்நிலையில் பா.ஜ.க. வால் கூட்டாட்சிக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஆபத்தாக நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்?**

ஆங்கிலேயரின் காலத்தில் காலனி நாடுகள் இருந்தது போல, இந்தி பேசாத மாநிலங்களைக் காலனிகளாகப் பார்ப்பதுதான் சனாதன சக்திகளின் நோக்கம். இச்சதியை இந்தி பேசாத மாநிலங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த விழிப்புணர்வு கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். கர்நாடகாவில் "நான் ஏன் இந்தி கற்க வேண்டும்?" என்று அவர்கள் கேள்வி எழுப்புவதாக நான் கேள்விப்பட்டேன். வடகிழக்கு மாநிலம் ஒன்றில் ஆளுநர் இந்தி பேசும்போது அங்கு அதனை எதிர்த்துக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இந்த உணர்வு இன்று இந்தியா முழுவதும் வந்திருக்கிறது. ஆகவே வருகிற தேர்தல் காங்கிரசிற்கும், பா.ஜ.க.விற்கும் நடக்கிற தேர்தல் என்பதைவிட, சனாதனத்திற்கும், அதற்கு எதிரான திராவிடம் என்ற அரசியல் தத்துவத்திற்குமான தேர்தல் என்றுதான் நான் பார்க்கிறேன். அத்தத்துவம் என்பது தேசியம், பொதுவுடைமை, மாநில உரிமை, சுயமரியாதை, சமூகநீதி என்று எல்லாவற்றிற்குமான தத்துவம் என்பதை நாம் நிலைநாட்ட வேண்டும்.

நேர்கண்டவர் : **வெற்றிச்செல்வன்**

# தமிழ்நாடு தரும் மகளிருக்கான உரிமைத் தொகை

## சாரதாதேவி



தேர்தல் வாக்குறுதிகளை, பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில், 85% வரை நிறைவேற்றிய ஆட்சி உலகிலேயே, தமிழ்நாட்டின் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியாகத் தான் இருக்க முடியும். எஞ்சியிருக்கும் 15% நிறைவேற்றிவிட அமைச்சர்கள் தொடர்ந்து முடுக்கப்பட்டுள்ளனர். நிதி மற்றும் மனித வளத் துறை அமைச்சர், திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் வருவாய்ப் பற்றாக்குறையையும், மாநிலத்தின் கடன் சுமையையும் கருத்தில் கொண்டு, எவ்வளவு தள்ளிப்போட்டாலும், முதல்வர் ஈரோட்டுத் தேர்தல் பரப்புரையின் போதே அறிவித்துவிட்டதால், அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, மார்ச் 20 அன்று வெளியிடப்பட்ட 2023-24க்கான வரும் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் குடும்பத் தலைவிகளுக்கான உரிமைத் தொகை அறிவிக்கப்பட்டுவிட்டது. பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளான செப்டம்பர் 15, 2023 முதல் அது நடைமுறைக்கு வரும்.

மகளிருக்கு உரிமைத் தொகை என்பது மொத்த வருவாய் செலவினங்களில் ஒவ்வொரு மாதமும் கொடுக்க வேண்டிய நிரந்தர செலவினம் ஆகிவிடும். ஆண்டுக்கு பன்னிரண்டு மாதங்கள், ஒரு கோடி மகளிருக்குக் கொடுத்தாலே ரூ.12,000 கோடி, அதாவது வருவாய்ச் செலவினங்களில் 5% ஆகும். நம் மொத்த வருவாய்ச் செலவினமான ரூ.2,32,062/- கோடிகளில் 68% அதாவது ரூ.1,57,802 கோடிகள் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் கடனுக்கான வட்டி ஆகிய நிரந்தர செலவுகளுக்குப் போய்விடுகிறது. எஞ்சியிருக்கும் 32% நிதியில்தான் நம்முடைய எல்லா மானியங்களும், வளர்ச்சித் திட்டங்களும் செயல்படுத்தப்பட வேண்டும்.

கூடுதலாக 5% எடுத்துவிட்டால் 27% தான் வளர்ச்சிப் பணிகளுக்கு எடுக்க இயலும். ஒரு அரசின் கைகள், தன் நிதி ஆதாரங்களில் கால் சதவிகிதத்தை மட்டுமே, வளர்ச்சிக்கும், போக்குவரத்து, மின்சாரம், நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட உள்கட்டுமானத்திற்கும், சேவைகளுக்கும் பயன்படுத்தக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதில்தான் சமூக நீதியை நிலை நாட்டும் சாதி ஒழிப்பு, சமத்துவபுரங்கள், ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன், மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதனால்தான் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல், ஊதிய, ஓய்வூதியப் பலன்கள் நிறுத்திவைப்பது, ஊதிய ஓய்வூதியச் சுமைகளைக் குறைக்க ஒப்பந்த முறையில் ஆள் எடுப்பது ஆகிய நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டியதாகிப் போய்விடுகிறது.

சென்ற ஆட்சியில் பணம் இல்லாமல் இலட்சம் கோடிகளில் கடன் வாங்கி மின்சாரத்தை வெளி மாநிலங்களில் வாங்கி, மக்களிடம் நல்ல பெயர் வாங்கிய கனவான்கள், கூடுதலான பணப் பற்றாக்குறையைச் சமாளிக்க அரசு ஊழியர்களின் பணிக்காலத்தைக் கூட்டிவிட்டனர். அதனால் ஓய்வுப் பலன்களைத் தள்ளிவைத்து அடுத்து வரும் அரசின் மீது அந்தச் சுமையை ஏற்றிவிட்டனர். அந்த நிலுவைகளை வழங்குவதாலும், அரசின் வருவாய்ச் செலவினங்கள் அதிகரித்துள்ளன.

நம் எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர் போர்வையில் இருக்கும் அரசின் தீவிர விமர்சகர்களும், இருக்கும் 2.50 கோடி குடும்ப அட்டைகளுக்கும் உரிமைத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும் என்று பேசுகின்றனர். அப்படித்தானே தேர்தல் அறிக்கையில் கூறினீர்கள் என்று எடுத்துப் பேசுகின்றனர்.

அதனால்தான் முதல்வர் அவர்கள் எந்த ஒரு திட்டமும், அனைவருக்கும் வீடு என்றால் வீடு அற்றவர்கள் என்றுதான் பொருள்; அனைத்து முதியோர் என்றால் ஆதரவற்ற முதியோர் என்றே பொருள்; அனைவருக்கும் வீடு என்பதும், அனைவருக்கும் நிலம் என்பதும் இல்லாதவர்களையே சுட்டும் என, சீரிய விளக்கம் ஒன்றை மார்ச் 27 அன்று சட்டப்பேரவையில் அளித்துள்ளார்.

மேலும், நிரந்தர வருவாய்ச் செலவினங்களை 7.5% மேலும் கூட்டுவது என்பது நம் வளர்ச்சித் திட்டங்களுக்கு மிகப் பெரும் தடையாக அமைந்துவிடும்.

முதல்வர் அவர்கள், நடைபாதைக் கடைகள் வைத்திருக்கும் மகளிர், மீன் பிடிக்கக் காலையிலேயே கடலுக்குச் செல்பவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வேலை செய்பவர்கள், சிறிய கடைகள் வைத்திருப்போர், சொற்ப ஊதியத்திற்கு நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் என உழைக்கும் பெண்களை மய்யப்படுத்தி அறிவிப்பை வெளியிட்டிருப்பதும் சிறப்பு.

எனினும் இதில், சொற்ப வருமான ஈட்டும் ஆண்கள், அதையும் குடித்துவிட்டு, குடும்பத்தை நிர்கதியாக்கும் கணவர்கள் என எளிய மற்றும் பொறுப்பற்ற ஆண்களைச் சமாளித்துக் கொண்டு, உழைக்கும் வாய்ப்புகளும் மறுக்கப்பட்டு, குழந்தைகளையும், வீட்டுப் பெரியவர்களையும், தன்னையும் காத்துக்கொள்ளப் போராடிக்கொண்டிருக்கும், வேறு உதவி எதுவும் பெறாத, குடும்பப் பெண்கள் விடுபட்டுவிடுவரோ என்ற அச்சம் எழாமல் இல்லை.

“தகுதி வாய்ந்த” இல்லத்தரசிகளைத் தேர்ந்தெடுக்கும்போது இவை கவனம் பெறும் என நம்புகிறோம். AAY மற்றும் PHH எனப்படும் வறிய, முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்களே, 1.2 கோடி பெண்கள் இருக்க, தகுதி வாய்ந்த பெண்களைத் தேர்ந்தெடுப்பது சவாலான பணியாகும். உரிமைத் தொகை, தேவையான, சரியான நபர்களுக்குப் போவதில் உள்ளாட்சி அமைப்புகள் நல்ல பங்காற்ற முடியும்.

சமூகத்தில் சரி பாதியாக இருக்கும் பெண்களுக்கான மேம்பாட்டில் அதிகக் கவனம் செலுத்தும் நம் சமூக நீதிக்கான திராவிட மாடல் அரசு இந்த மைக்கல்லையும் எளிதில் கடந்து பீடு நடை போடும்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian